தின பார்வை
நடுநிலை நாளிதழ்
DINAPARVAI TAMIL DAILY
RNI No: TNTAM/2010/40365
நிறுவனர்/ஆசிரியர்: எம்.சிட்டிபாபு
20.01.2024

# மதுரை கூட்டு நடவடிக்கை குழு சார்பாக கலெக்டாரிடம் மனு

மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் வீடு, அலுவலகங்களில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் சமீபத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த துணை மேயர் நாகராஜன், மனைவி செல்வராணி ஆகியோர் வீட்டில் இருந்தபோது, அதே பகுதியை சேர்ந்த இருவர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் இருசக்கர வாகனம், அலுவலக கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. துணை மேயர் நாகராஜன் வீட்டு வளாகத்திற்குள் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்து அவரையும் அவரது மனைவியையும் கொலை செய்யும் நோக்கத்தோடு தாக்க முற்பட்டுள்ளனர்.

இருவரும் சேர்ந்து வீட்டுக் கதவை தாழிட்டு அவர்களிடம் இருந்து தப்பியுள்ளனர்.

அவர்களை தாக்க இயலாமல் போனதால் அவரது வீடு மற்றும் அவரது அலுவலகத்தில் இருந்த கண்ணாடிகளையும் வீட்டு முன்பு நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனங்களையும் அடித்து நொறுக்கி தாக்குதல் ஈடுபட்டுள்ளனர். வீடு மற்றும் அலுவலகத்தில் நடந்த தாக்குதல் என்பது துணைவியை கொலை செய்யும் நோக்கத்தோடு திட்டமிட்டபடி நடத்தப்பட்டதாகும்.

இதனைத் தொடர்ந்து துணை மேயர் விழிப்புணர்வுடன் இருந்ததால், அவரது உயிரை காப்பாற்றிக் கொள்ள நேர்ந்தது.

இவர் மீதான தாக்குதலை கொடுமைச் சமூகங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்றும் பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் ஒன்றாக இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கை கூட்டத்தில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க கோரி பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன. இதில், இக்கொடூர தாக்குதலை நடத்தியவர் மீது சரியான சட்டப் பிரிவுகளில் குற்ற வழக்கு பதிவு செய்து அவர்களை உடனடியாக நடவடிக்கை எடுத்து குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து மதுரை மாநகரின் அமைதியை நிலைநாட்டிட வேண்டும். விசாரணை பாரபட்சம் இன்றி சிபிசிஐடி பிரிவிற்கு மாற்ற வேண்டும். குற்றகும்பலுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய ஆய்வாளர், சார்பு ஆய்வாளர்கள் உடனடியாக அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்ய வேண்டும். துணை மேயர் நாகராஜன் உயிருக்கு அச்சத்தில் உள்ளதால் 24 மணி நேர காவல்துறை பாதுகாப்பு (பிஎஸ்ஓ) வழங்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் குற்றங்கள் பெருகி உள்ளன.

இதனால் பெண்கள் இளைஞர்கள் குழந்தைகள் என ஒட்டுமொத்த சமூக முழு பாதிப்பிற்கு ள்ளாகிறது. எனவே, தடை செய்யப்பட்ட போதை பொருட்களை மறைமுகமாக விற்பனை செய்யும் கும்பலை முற்றிலுமாக ஒழிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



இதனைத் தொடர்ந்து மதுரையில், கூட்டு நடவடிக்கை குழு சார்பாக மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி தீபன், மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் வாஞ்சிநாதன், சோக்கோ அறக்கட்டளை வழக்கறிஞர் செல்வ கோமதி,

வழக்கறிஞர் அப்பாஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காளிதாஸ் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட அமைப்பினர், மதுரை காவல் ஆணையாளர் லோகநாதன் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா ஆகியோரிடம் மனு அளித்தனர்.